# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.

---

[1980, சனவரி மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1980, *சனவரி மாதம்* 18 *ஆம் தேதிய* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *வர்த்தமானப் பத்திரிகையின்* II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 25

# 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத் திட்டங்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1980, சனவரி மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 81/79

1271

**நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கென அவசரமாகத் தேவைப்படும் காணிகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக :—

கருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கென அவசரமாகத் தேவைப்படும் காணிகளை வெளிப்படுத்தல்.

2. சனாதிபதியானவர், நகர அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின் மீது, மக்களின் பொதுச் சேமநலம் பற்றிய நீதியான தேவைப்பாடுகளை அளிக்கக்கூடியதான நகர அபிவிருத்திக் கருத்திட்டமொன்றினை நிறைவேற்றும் நோக்கத்துக்காக குறித்த ஏதேனும் காணி, அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள காணிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றது அல்லது தேவைப்படுகின்றன என அபிப்பிராயப்படுகின்றவிடத்து, சனாதிபதியானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய காணி அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பிலுள்ள காணிகள் அத்தகைய நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றது அல்லது தேவைப்படுகின்றன என வெளிப்படுத்தலாம்.

இரண்டாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றின்மீது கிடைக்கக்கூடிய பரிகாரங்களின் மீதான மட்டுப்பாடு.

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஒரு கட்டளையால் இன்னலுறுகின்றவரான அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழானதெனக் கொண்டு அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழானதெனக் கொண்டு குறித்த ஏதேனும் காணியில் அல்லது குறித்த ஏதேனும் காணி தொடர்பில் அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணியில் அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணி தொடர்பில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்க உத்தேசிக்கப்படுகின்ற ஏதேனும் செயலால், அல்லது நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவரான அல்லது தாம் பாதிக்கப்படுவார் என்று அஞ்சுகின்றவரான ஆள் எவரும்—

(அ) நட்டஈடு அல்லது சேதஈடு என்ற வகையில் தவிர நீதிமன்றமெதிலும் எந்தப் பரிகாரத்தையும் அல்லது நிவர்த்தியையும் அல்லது நிவாரணத்தையும் பெறுவதற்கு உரித்துடையராதலாகாது;

(ஆ) ஏதேனும் நிரந்தர உத்தரவையோ இடைக்கால உத்தரவையோ அல்லது பிணிப்பாணையையோ அல்லது நிறுத்திவையென்ற கட்டளையையோ அல்லது எவரேனும் ஆளை, குழுவை அல்லது அதிகாரசபையை நிறுத்திவைக்கின்ற, மட்டுப்படுத்துகின்ற அல்லது முடக்குகின்ற பயன்கொண்ட வேறேதேனும் கட்டளையையோ—

(i) அத்தகைய ஏதேனும் காணியை அல்லது அத்தகைய இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணியைக் கொள்ளுதல் தொடர்பில்;

ஏ 46831—6,750 (12/79)

(ii) அத்தகைய ஏதேனும் காணியில் அல்லது அத்தகைய இடப் பரப்பிலுள்ள ஏதேனும் காணியில் ஏதேனும் வேலை நிறை வேற்றப்படுதல் தொடர்பில் ;

(iii) அத்தகைய கருத்திட்டத்தை எத்தன்மைத்தான எம்முறை யிலேனும் செயற்படுத்துதல் தொடர்பில்,

பெறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

எழுத்தாணைகள் வழங்குவதற்கு உயர்நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

4. (1) அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கமானது, குறித்த எந்தக் காணி தொடர்பில், அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள எந்தக் காணி தொடர்பில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று அல்லது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழானதெனக் கொள்ளப்படும் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணி தொடர்பாக, உயர்நீதிமன்றத்தினாலேயே பிரயோகிக்கப்பட வேண்டுமேயல்லாது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தை அவாவுகின்ற விண்ணப்பம் ஒவ்வொன்றும், அத்தகைய விண்ணப்பம் எச்செயல் தொடர்பில் அல்லது எச்செயல் தொடர்பாகச் செய்யப்படுகிறதோ அச்செயல் புரியப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், உயர்நீதிமன்றமானது, அத்தகைய விண்ணப்பம் கோப்பிடப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அத்தகைய விண்ணப்பத்தை விசாரணைசெய்து இறுதியாக முடிவு செய்தலும் வேண்டும்.

ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள விண்ணப்பங்கள், வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், கருமங்கள் என்பன பற்றிய ஏற்பாடுகள்.

5. இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின்கீழான கட்டளையொன்றை அல்லது இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழானதெனக் கொள்ளப்படும் கட்டளையொன்றைச் சனாதிபதி ஆக்குமிடத்து, அத்தகைய கட்டளை வெளியிடப்படும் நேரத்தில் குறித்த ஏதேனும் காணி தொடர்பாக, அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் காணி தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள ஏதேனும் விண்ணப்பத்துக்கு, வழக்குக்கு, வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது கருமத்துக்கு, (அத்தகைய விண்ணப்பம், வழக்கு, வழக்கு நடவடிக்கைகள் அல்லது கருமம் இச்சட்டம் வலுவுக்கு வருவதற்கு முன்னரே தொடுக்கப்பட்டதாயினுஞ்சரி அதற்குப் பின்னர் தொடுக்கப்பட்டதாயினுஞ்சரி) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க—

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வகையில் அல்லது அவற்றுக்கு இயைந்தொழுகும்வகையில், ஏலவே ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது திரிபுபடுத்துவதற்கு, அல்லது எவையேனும் வழக்குரைகளின் திருத்தத்தை அல்லது எவரேனும் கட்சிக்காரரால் எவையேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை அனுமதிப்பதற்கு, அல்லது அவசியமாகக்கூடியவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்குவதற்கு, நீதிமன்றம் உரித்துடையதாதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலம் முடிவடைவதற்குமுன்னர், அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைச் செய்வதற்கு எவரே னும் கட்சிக்காரர் உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன்

(இ) அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தை அவாவு கின்ற ஏதேனும் விண்ணப்பம், அத்தகைய கட்டளை வெளியிடப் பட்ட நேரத்தில் அத்தகைய நீதிமன்றத்தில் முடிவுறுதுள்ள விடத்து, அத்தகைய விண்ணப்பம் உயர்நீதிமன்றத்துக்கு மாற் றப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், உயர்நீதி மன்றமானது, அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியி லிருந்து இரண்டு மாதங்களுக்குள் அத்தகைய விண்ணப் பத்தை விசாரணைசெய்து இறுதியாக முடிவுசெய்தலும் வேண் டும்.

**உயர்நீதி மன்றத்தின் தத்துவங்கள் 3 ஆம் பிரிவினால் பாதிக்கப் படாதிருத்தல்.**

6. அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில், அல்லது இச்சட்டத்தின் 4 (1) என் னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கை யில், உயர் நீதிமன்றமானது மற்றப்படிக்குச் சட்டமுறையாகப் பிரயோ கிக்கும் தத்துவங்களை இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் அடங்கியுள்ளது எதுவும் பாதித்தலாகாது.

**1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதல்.**

7. (1) குறித்த எந்தக் காணி தொடர்பில் அல்லது ஏதேனும் இடப் பரப்பிலுள்ள எந்தக் காணி தொடர்பில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒரு கட்டளை அல்லது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழான தெனக் கொள்ளப்படும் ஒரு கட்டளை வெளியிடப்பட்டுள்ளதோ அந்தக் காணியை ஏதேனும் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தை நிறைவேற் றும் நோக்கத்துக்காக அல்லது நிறைவேற்றுவதில் உதவிபுரியும் நோக்கத் துக்காக உடைமையிலெடுப்பது அரசாங்கத்துக்கு, அல்லது எவரேனுமா ளுக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு அல்லது ஏதேனும் அதிகாரசபைக்கு அவசியமாகுமிடத்து, 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணி கள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நடவடிக் கைகள் எடுப்பது அரசாங்கத்துக்கு அல்லது அத்தகைய எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் குழுவுக்கு அல்லது ஏதேனும் அதிகார சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன், அதற்கி ணங்க—

(அ) அத்தகைய சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறாக "அரச காணி" என்னும் சொல்லமைப்பு, அத்தகைய எவரேனு மாளுக்கு, குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப் பட்டுள்ள அல்லது அவருக்கு அல்லது அதற்குச் சொந்தமாக வுள்ள, அல்லது அத்தகைய ஆள், குழு அல்லது அதிகாரசபை கையுதிர்ப்பதற்கு உரித்துடையவராகவுள்ள அல்லது உரித் துடையதாகவுள்ள ஏதேனும் காணியையும் உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) " தகுதிவாய்ந்த அதிகாரி " என்னும் சொல்லமைப்பு, அத்தகைய குழுவின் அல்லது அதிகாரசபையின் அத்தகைய ஆணையும் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) குறித்த எந்தக் காணி தொடர்பில் அல்லது ஏதேனும் இடப் பரப்பிலுள்ள எந்தக் காணிதொடர்பில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான ஒரு கட்டளை அல்லது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான தெனக் கொள்ளப்படும் ஒரு கட்டளை வெளியிடப்பட்டுள்ளதோ அந்தக் காணி தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் இறுதியாக முடிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள் அந்தக் காணியிலுள்ள எல்லா ஆட்களையும் வெளியேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அத்தகைய எல்லாக் கட்டளைகளையும் நீதிமன்றம் ஆக்குதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

8. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"காணி" என்பது அரசுக்கு, தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு, தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு, ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கு, அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவருக்கு அல்லது அதற்குச் சொந்தமான காணியையும் உள்ளடக்கும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையில் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.